செ.வெ.எண். 71 நாள்: 29.08.2019

**கிருஷ்ணகிரி மாவட்டம் மத்துார் ஒன்றிய பகுதிகளில் உள்ள ஏரிகளில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் துார்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று (28.08.2019 ) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்துார் ஒன்றியம் சிவம்பட்டி ஊராட்சி, களர்பதி ஊராட்சிகளில் நடைபெற்று வரும் ஏரிகளில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் துார்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் இன்று (29.08.2019 ) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஏரிகள் குளம் குட்டைகள் குடிமராமத்து திட்டத்தின் கீழ் துார் வாரும் பணிகள் தற்போது நடைபெற்ற வருகிறது. அதனடிப்படையில் மத்துார் ஒன்றியத்தில் மட்டும் 8- ஏரிகள் 25 குட்டைகளில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் துார்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று சிவம்பட்டி ஊராட்சியில் உள்ள மந்திப்பட்டி ஏரி ரூ. 5 - லட்சம் மதிப்பில் துார் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதேப்போல களர்பதி ஊராட்சியில் கொத்தக்கொட்டை ஏரி ரூ. 5 ___ லட்சம் மதிப்பில் ஏரி துார் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நிலஅளவையர்கள், மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி கரைகளை பலப்படுத்தியும், நீர் வரத்து கால்வாய், நீர் வெளியேற்று கால்வாய், மற்றும் மதகுகள் சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டம் முழுவதும் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 100- ஏரிகள், 325 குளம் குட்டைகள் துார் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் ஜல்சக்தி அபியான் திட்டத்தின் மூலம் தொண்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், மூலம் 150 ___ ஏரிகள் துார் வாரப்பட்டு கடந்த வாரம் பெய்த மழையினால் 25- சதவிகிதம் ஏரிகளில் நீர் இருப்பு உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான குடிமராத்து திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து ஏரிகள் குளம் குட்டைகள் மழை நீர் தேக்கி வைக்க அனைவரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆடசித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. தமிழரசன், திரு.துரைசாமி, ஊரக வளர்ச்சித் துறை உதவி செயற்பொறியாளர் திரு. ஆர்.சுப்பிரமணியன், பொறியாளர்கள் திரு. திரு.சௌந்தரராஜன், திரு.சாஸ்த்தா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், உதவி மக்கள்தொடர்பு அலுவலர் திரு. சு.மோகன், பணி மேற்பார்வையாளர்கள் திரு. நாகூர் மீரான், திரு.ரவி ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.